**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை :- **திரு. A.S. அமீர்தீன், B.A.,B.L.,L.L.M.,DJJJ.,Psy.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி,(முழு கூடுதல் பொறுப்பு)

நீதித்துறை நடுவர் எண்.1, மன்னார்குடி.

2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 06 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2053 ஸ்ரீ சுபகிருது வருடம் மார்கழித் திங்கள் 22 ஆம் நாள்

**இடைநிலை மனு எண். 357/2022-ல்**

**அசல் வழக்கு எண். 22/2021**

திருத்துறைப்பூண்டி முன்சிபி மற்றும் தாலுக்கா, சீராள்தூர் வட்டம், நெ.3/314, திருக்கொள்ளிக்காடு கிராமத்தில் வசிக்கும் அப்துல்வாஹீது மனைவி, இந்தியன், முஸ்லீம், 51 வயதுள்ள ஜீலைகாபீவி .... மனுதாரர்/வாதி

**// எதிர்//**

1. மன்னார்குடி முன்சிபி மற்றும் தாலுக்கா, இருள்நீக்கி வட்டம், சின்னக்குருவாடி கிராமம், மெயின்ரோடு என்ற முகவரியில் வசிக்கும் கோவிந்தன் குமாரர், இந்து, 61 வயதுள்ள உதயகுமார்.
2. மன்னார்குடி முன்சிபி மற்றும் தாலுக்கா, இருள்நீக்கி வட்டம், சின்னக்குருவாடி கிராமம், மெயின்ரோடு என்ற முகவரியில் வசிக்கும் கோவிந்தன் குமாரர், இந்து, 41 வயதுள்ள ஜீவா. ....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது, அசல் வழக்கு 08.09.2022 ம் தேதியன்று மனுதாரர்/வாதியின் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டுள்ள உத்தரவை ரத்து செய்து வழக்கை கோப்பில் எடுத்து உத்தரவிடக்கோரி உ.ந.ச.கட்டளை 9 விதி 9-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள் :- 22.09.2022**

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 22.09.2022

இம்மனுவின்மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு 22.06.2022 ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு இன்று (23.12.2022) என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. எஸ்.உதயகுமார்** அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. G. ஜீவானந்தம் அவர்கள்** முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும்,

வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று(06.01.2023) இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. இம்மனுவானது கடந்த 08.09.2022 ம் தேதியன்று வாதியின் வருகையின்மையால் தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவை ரத்து செய்து அசல் வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுத்து மேற்படி வழக்கை மேல் நடத்திட அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

02. மனுதாரர்/ வாதி, இம்மனுவின் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு செலவுத் தொகையாக ரூ. 500/-த்தை செலுத்தவேண்டும் என்ற நிபந்தனையுடன் மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

2023 ம் ஆண்டு ஜனவரி மாதம் 06-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

S/d. A.S.Ameerdheen,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.(மு.கூ.பொ)